**டிசம்பர் - 22**

**"ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்." - 2தீமோ 2.21.**

ஒருவன் தேவனிடத்திலிருந்து கனத்தைப்பெற விரும்பினால், தேவனுடைய குறிப்பிட்ட வழியில் அதை நாடத் தவறாதிருப்பானாக. அதுதான் தாழ்மையின் பாதை. ஏனென்றால், தாழ்மையுள்ளவர்களுக்குக் கர்த்தர் தனது தயவைக் கொடுக்கிறார். எஜமானுடைய உபயோகத்திற்காக ஒரு தகுதியான பாத்திரமாகவும் கனத்துக்குரிய ஒரு பாத்திரமாகவும் இருக்க வேண்டுமானால், தேவனுடைய வல்லமையான கரத்திற்கடியில் உன்னையே தாழ்த்து. அப்பொழுது குறித்த காலத்தில் அவர் உன்னை உயர்த்துவார். அது சம்பந்தமாக அவசரப்படவும் செய்யாதே. ஆனால் எஜமானின் உபயோகத்திற்காகத் தகுதியானதாயிருப்பதற்காக உன்னுடைய மண்பாண்டத்தை சுத்திகரிக்க ஆரம்பித்து அதை எப்பொழுதும் தொடர்ந்து செய்துகொண்டு, "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பலத்தோடே செய். **- Z 02, 319 (R 3096).**

நாம் எந்த காரியங்களிலிருந்து நம்மைச் சுத்திகரிக்கவேண்டியவர்களாயிருக்கிறோமோ, அவைகள் மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியுமாகும். உடலின் அசுத்தம், புகையிலை, மதுபானம், மருந்திட்டு மயக்கமூட்டும் பழக்கம், அமிதமாக உண்ணுதல், நெறிதவறிய நடத்தை முதலிய நம்முடைய சரீரத்தில் வேர் கொண்டிருக்கிற தீமைகளினின்று மட்டுமல்லாமல், நம்முடைய மனதில் இருதயத்திலும் வேர்கொண்டிருக்கிற தப்பான உபதேசங்கள், அவிசுவாசம், நம்பிக்கையின்மை, தயக்கம், பொறுமையின்மை, புத்தியின்மை, சகோதர அன்பில்லாதிருத்தல், தன்னையம், பெருமை, கர்வம், கோழைத்தனம், சோம்பல், சண்டைச் சச்சரவு, வெறுப்பு, உண்மையில்லாதிருத்தல், பேராசை முதலிய, தீமைகளினின்றும், நாம் நம்மை விடுவித்துக் கொள்ளவேண்டுமென்றும் இது குறிக்கிறது. நம்முடைய கிறிஸ்தவப் போரின் ஒரு முக்கியமான பாகம், பாவம், தப்பறை, உபதேசம் தன்னையம், உலகத்தனம் முதலியவைகளுக்கு எதிராக நாம் செய்கிற யுத்தமாகும். இதனால், நாம் தீமையைவென்று நம்மையே குற்றங்களைந்து, தூய்மைப்படுத்துகிறோம். இப்படிப்பட்ட தூய்மைப்படுத்தல், பரிசுத்த ஆவியின் செயலினாலே செய்யப்பட்டு இந்த ஆவியைப் பலப்படுத்துகிறது. இது நம்மைத் தேவனுக்கு முன்பாக கனமுள்ளவர்களாக்குகிறது. நம்மை அவருக்கு நியமித்து ஒதுக்கிவைக்கிறது. அவருடைய ஊழியத்திற்காக நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறது. எல்லா நல்வார்த்தைக்காகவும், கிரியைக்காகவும் நம்மை ஆயத்தப்படுத்துகிறது. நம் எல்லோருக்கும், விஷேசமாக பரதேசிகளுக்கும் மூப்பர்களுக்கும் இந்த உத்தரவு உபயோகிக்கப்படுகிறது. "கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, உங்களைச் சுத்திகரியுங்கள்." **- P 32, 197.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**லேவி 21.6, ஏசா 6.5-8, 52.11, எரே 15.19, மத் 20.25-28, ரோம 2.21,23, 1கொரி 5.1-8, 6.9-20, 11.28-32, 2கொரி 6.3-7,16, 7.1, 13.5, கலா 5.19-21, எபே 5.3,4, 1தீமோ 3.1-15, 6.11, யாக் 3.10.**

**கோபுர வாசிப்பு : Z 02, 318 (R 3096).**

**வினாக்கள் : இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றின் பலன்கள் எவை?**